**OS.No.142/2019** **P.W.1-பாண்டுரங்கன்** **27.10.2025**

<u>**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

நான் என் சகோதரர் மீது சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று விடுதலை பத்திரம் போட்ட அன்றே அவர் தன் மனைவிக்கு வேறு ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். என் முன் காட்டப்படும் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் இருப்பது என் கையொப்பம் தான். என் முன் காட்டப்படும் சார் பதிவாளர் அலுவலகம் கொடுத்த ரசீதில் இருப்பது என் கையொப்பம் தான். அந்த ரசீது பி.சா.ஆ.1. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் பத்திரம் போடும் போது எனக்கு பக்கவாதம் தாக்கியதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. ஒரு வாரம் மருத்துவமனையில் இருந்து விட்டு பிறகு வெளியேறி விட்டேன் என்றால் சரியல்ல. என் தம்பி பெயரில் நான் ஆவணம் எழுதிக் கொடுக்கும் போது என் உடல்நிலை நல்ல நிலையில் இருந்தது என்றால் சரியல்ல. என் உடல்நிலை நன்றாக இருந்தது என்றும், நானே சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து ஆவணங்களை பெற்று என் தம்பி கைவசம் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது தம்பியிடம் இருந்து நான் எந்த காலத்திலாவது பணம் பெற்றேனா என்றால் இல்லை. 1996-ல் என் தம்பியிடம் இருந்து எனது பாகத்திற்கான பணத்தை பெற்றுக் கொண்டேன் என்றும், அதன் பின்னர் நான் வாங்கிய பணத்திற்காக என் தம்பிக்கு ஒரு பதிவில்லாத விடுதலை பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பாகம் கோருவதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. என் பாகத்திற்கான பணத்தை பெற்றுக்கொண்ட பின்னர் தான் நான் என் தம்பிக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு சட்டப்படி நிலைநிற்கதக்கதில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை